Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி௵ (1889) ஆனிமீ 28௳ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்- சூ௬] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி௵ வைகாசிமீ ௨௳ வெள்ளிக்கிழமை (17 MAY. 1957) [இல- சூ]

அரசியல் அலை

# விசாக விழாவிலே பிரதமரின் வேண்டுகோள்

## அன்பாய் ஆதரவாய் - அனைவருடனும் வாழுங்கள்

— பேச்சளவில்

## ஒரு மொழி ஒரு இனம் ஒரு மதம்

— செய்கையில்

**விசாக விழாவிலே அரசியற் பேச்சு நடப்ப தென்றால் அதிலே ஒரு மர்மம் இருக்க வேண்டும் —**

**விசயன் 2500 ஆண்டுகளுக்கு முன் வேறு தேசத்தி னின்று வெளியாக்கப்பட்டுத் திரைகடலின் விப ரீதத்தால் இந் நாட்டில் வந்து இறங்கினான் — ஒரு சாதியாரை உருவாக்கினான் —**

இந்த வரலாற்றின் ஞாபகமாகவுள்ள விசாக விழா விலே பிரதமரின் பொன்மொழிகளின் பொழிப்பு எவ்வாறிருக்கின்றதென்பது ஊன்றி யோசித்தாற் புலப்படும்.

புத்தர் போதித்தது அன்பு நெறியை அயலவர்களை அடக்கி ஆளும்படி அந்த நெறிகற்பிக்கவில்லை. மதபோதகராகும் மகிமையைப்பெற்றபுத்தரின் போதனையின்பயனைப் புத்த அரசியல் வாதிகளிடத்திலே அணுவளவும் காணப்படாதிருப்பதற்குக் காரணமென்ன? இரண்டாயிரம் ஆண்டு விழாவென்று இறுமாப்புடன் கொண்டாடப்படும் 1956—57 இலே புத்தரின் பஞ்சசீலக்கொள்கை இலங்கை அரசியல் முனையிற் பஞ்சாய்ப் பறந்து போயிற்றி என்று சொல்வதற்குப் போதிய சான்றுகளைப் பண்டாரநாயக ஆட்சியாளர் அளித்திருக்கிறார்கள். தனிச் சிங்களச் சட்டம் வகுத்த பிரதமரா புத்த பஞ்சசீலத்தைப்பற்றி இந் நாட்டுமக்களுக்குரைப்பது?

தீமைக்கும் துன்பத்துக்கும்காரணமானதன்னயங் கருதும் சுயவிருப்பைத் தடுக்க வேண்டுமென்று நாக்கூசாது நவின்றிருக்கின்றார் பிரதமர். தனிச் சிங்களச் சட்டம் சுயநல விருப்பா பரநலப் பரோபகாரமா? இந்தத் தன்னய அரசியல் வேட்டையால் மக்கள் ஐக்கிய முன்னணியார் கல்லோயாக் கலகம் போன்ற பல தீமைகளுக்கும் துன்பங்களுக்கும் காரணராயிருந்தனர் என்பதை முதல் அமைச்சர் மறுக்கத் துணிவாரா?

புத்த மதத்தின் பேரால் ஏன் இத்தனை அடாத செயல்கள். ஆகாதன செய்துவிட்டு மாஞானம் பேசுகின்றார் தலைமை அமைச்சர். வாய் வேதாந்தத்துக்கும் ஒரு வரையறை யில்லையா?

---

### அர்ச்சகர் பற்றி இந்துமா மன்றத்தின் தீர்மானம்

இந்துமாமன்றத்தின் விருடாந்தக் கூட்டம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் தலைவர் திரு. சி. குமாரசுவாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. எம்சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள இடைஞ்சல்களைத் தீர்க்க ஒற்றுமையாயும் விடாமுயற்சியுடனும் நாம் உழைக்கவேண்டுமென்று அக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

அர்ச்சகர்களைப் பயிற்றுதற்கு ஓர் வேதாகமக் கல்லூரியை அமைக்கும் பணியை உடனே மேற்கொள்ள வேண்டுமென்று ஓர் பிரேரணையும் நிறைவேற்றப்பட்டது.

---

### கடல் உரிமைபற்றி ஆலோசனை

இந்திய மண்ணிலிருந்து கடலுக்குள் நூறு மைல் தூரம் இந்தியாவுக்குரித்தான இடமாகும் என்று இந்தியா கருதுவதுபற்றி இலங்கை முதல் மந்திரி ஆலோசனைகள் நடத்துகிறாராம். இந்திய முதல் மந்திரி இங்கே வரும்பொழுது இதுபற்றி அவருடன் பேசவும் தீர்மானித்துள்ளார்.

### பிரித்தானிய அரசாங்கத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை

சுவெசுக்கால்வாய் நிகழ்ச்சிகளால் பிரித்தானிய பெருமைக்கு இழுக்குண்டாய் விட்டதென்றும் பொருளாதாரத் துறையிலும் அவை பிழை செய்து விட்டதென்றுபிரித்தானிய பாராளுமன்றத்தில் தொழிற் கட்சியார் ஓர் பிரேரணை கொண்டுவர அறிவித்தல் கொடுத்திருக்கின்றனர்.

---

### கோவாபற்றிக் கத்தோலிக்க அருளாட்சிக் கருத்து

பங்களூரின் பிரதானகத் தோலிக்க அத்தியட்ச குருவானவர் நிகழ்த்திய பேருரை ஒன்றிலே கோவாத் தொடர்பில் பலரைப்பாதிக்கும் பல பிழையான கருத்துக்களை நீக்கி இந்திய கத்தோலிக்க மக்களின் நிலைமையைச் சந்தேக விபரீதங்களுக்கிடமில்லாதவாறு நன்கு விளக்கியுள்ளார்.

சரித்திர முறையிலும் பூமிசாஸ்திர முறையிலும், மக்கள் இனமுறையிலும் பார்க்கும்பொழுது கோவா இந்தியாவின் ஓர் பகுதியாயமைந்துள்ளது. ஆகையினாலே கோவா இந்தியாவுடன் இணைந்தேதீரும் என்ற இந்திய மக்களின் கருத்து இந்திய கத்தோலிக்க மக்களின் கருத்துமாயமைந்துள்ளது. 15:0 ஆண்டு மட்டும் கோவா இந்தியாவின் ஓர் பகுதியாயேயிருந்திருக்கின்றது. கோவா இந்தியாவுடன் இணைவதால் கத்தோலிக்க மக்களின் சமய சுதந்திரம் பாதிக்கப்படவேமாட்டாது. புதுச்சேரியின் உதாரணம் எவ்வித சந்தேகத்தையும் நீக்கி இவ்வுண்மையை வலியுறுத்துகின்றது என்று அவர் தமது பேருரையிற் கூறினார்.

போர்த்துக்கேய அரசாங்கத்துக்குச் சார்பான கருத்துடையவராயிருக்கின்றார் பாப்பாண்டவர் என்று சிலர் நினைப்பதை அவர் வன்மையாகக் கண்டித்தார்; கத்தோலிக்க அருளாட்சி இந்தியாவில் இந்தியமயமாயேயுள்ளது என்று அவர் மேலும் பேசும்போது வலியுறுத்தினார்.

---

# சத்சங்கம் வேண்டப்படுவதேன்?

## நாம் பெறக்கூடிய நன்மைகள் எவை?

### அடைதற்குச் செய்யவேண்டிய சாதனைகள் என்ன?

'சத்' என்பது கட்புலனுக்குத் தோன்றுவதாகி மாறுதலடைந்து வருகின்ற இவ்வுலகத்தை நிலைபெறச் செய்து தாமோ மாறுதலடையாது நிலைபெறுவதாகிய பிரமமாகும். சர்வ வியாபகம், சர்வ வல்லமை, சர்வஞ்ஞத்துவம் (எங்கும் நிறைதல், வரம்பிலாற்றல், எல்லாமறிதல்) ஆகிய பண்புகளுடையதாகும். அப்பொருள் ஈசுவரன் என்று சொல்லப்படும். பிரமம், ஈசுவரன் என்னும் இரு சொற்களையும் 'சத்' என்னும் சொல் குறிக்கும்.

'சங்கம்' என்பது உடனிருத்தல் அல்லது ஒன்று சேர்தலைக் குறிக்கும். சத்சங்கம் என்பது இறைவனுடன் எப்பொழுதுமிருத்தலையும் பிரமத்துடனியைந்திருத்தலையும் குறிக்கும். ஈசுவரன், பிரமம் என்று வேறு வேறாகச் சொல்வது உண்மையில் ஒரு பொருளையேயாகும்.

அஞ்ஞானமிருக்கும்வரையும் பிரமத்தை அறிதல் முடியாது. அஞ்ஞானம் நீங்கும்பொழுது ஒருவருடைய உண்மைத் தன்மையை அவர் அறிகிறார். இவ்வாறு அஞ்ஞானம் நீங்கித் தமது உண்மைத் தன்மையை ஒருவர் உணரக் கூடியதாய் வருமளவும் குன்றாத பய பக்தியுடன் இறைவனை வழிபடுதல்வேண்டும். அவ்வாறு செய்யும்பொழுது இறைவன் எமக்காக ஓர் திருவுருவத்தைக் கொள்ளுகின்றார். இவ் வழிபாட்டுமுறையும் சத் சங்கமாகக் கொள்ளப்படுகின்றது.

சத்சங்கம் என்பதற்கு மற்றோர் உறுப்புமுளது. அது, உண்மையை உணர்ந்த ஞானிகள் அல்லது உண்மையை உணர முயலும் அடியார் ஆகியோரின் சகவாசத்தைப் பெறுதலாகும்.

சத் புருடனை அல்லது ஞானியை நேரிலடைதல் மிகக் கடினமானதொன்றாகும். அன்னவர் ஒருவரை அறிதல் அதனிலும் கடினமானதாகும். இலௌகிக ஆசையுள்ள ஒருவர் தன்னுடைய அறிவின் அளவு கொண்டே ஒரு ஞானியை அளக்கின்றார். தமது தொடர்பால் தாம் விரும்பிய நன்மையை அவரிடம் உடனே பெறுவிட்டால் அவர் உண்மையான ஞானி அல்லரென்று தீர்மானித்துவிடுகின்றார். அப்படி அவரைக் கைவிட்டபோதிலும் அந்த ஞானியுடன் முன்பு உண்டான தொடர்பால் அத்தொடர்பின் அளவுக்கு அவருக்கு நன்மையுண்டாகின்றது. ஞானிகளாவோர் உயிருடன் உலாவும் இறைவன் தோற்றங்களாயுள்ளனர். அவர்களைக் காண்பதால் அவர்களுடன் பேசுவதால், அவர்களின் திருமேனியைத் தீண்டுவதால அவர்களைத் தியானிப்பதால் ஒருவர்மீது இறைவனுடைய திருவருட் சக்தி உடனேபாய்கின்றது; அதனால் அவர் ஆன்மார்த்த நலன்களை யடைகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வாழ்கஅந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங் [குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஹூ வைகாசி மீ
சஉ வெள்ளிக்கிழமை


## அரசியற் பேச்சு இல்லையாம்!

ஆற்றலால் அநுபவத்தால் மட்டுமன்று - மகாத்மா காந்தியின் அடிச்சுவட்டை உணர்ச்சியுடன் பின்பற்றி வருவதாலும் ஆழ்ந்த அரசியல் ஞான அமைவு அடைந்துள்ள நேருப் பெரியார் இலங்கை முதல் அமைச்சருடன் புத்தவிழாக் கொண்டாட்டத்தின்பொழுது அரசாங்க அலுவல்களைப் பற்றிக் கலந்துரையாடுவது பொருத்தமாகாதென்று முடிவு செய்திருப்பதை அக மகிழ்ச்சியுடன் வரவேற்று ஆறுதலடைகின்றோம்.

இந்நாட்டு அரசியல் நெருக்கடியில் தமிழகம் சிக்கியிருக்கின்ற தென்பதையும், தமிழ் பேசும் மக்கள் என்பது இலங்கை வாழ் இந்தியர்களையும் குறிக்கும் என்பதையும்முதல்அமைச்சர் பண்டாரநாயக உணர்ந்திருந்தும் தமிழகத்திலுள்ள ஒரு சாராரின் அலுவல்களைப்பற்றி இந்தியப் பிரதமருடன் வழியில் மறித்துப் பேச்சு நடத்துவது தமிழ் பேசும் மக்களுக்குட் பிரிவினையை உண்டாக்குவதற்குரிய சூழ்ச்சி யென்றும் சென்ற இதழிலே நாம் குறிப்பிட்டிருந்தோம். நேருப் பெரியாருடன் திரு. பண்டாரநாயக அரசியல் அலுவல்களைப்பற்றி ஆராயும்பொழுது தமிழ்ப்பேசும் மக்களின் இன்னல்களும் விவாதிக்கப்படல் வேண்டும். அவ்வாறு அரசியற் பேச்சு இரு பிரதமர்களுக்கும் இடையில் நடைபெறுவதற்கு முன் நேருப் பெரியாருக்கு இலங்கைத் தமிழக மக்கள் தூது அனுப்பித் தமிழ் பேசும் மக்களுக்கு விளைந்திருக்கும் பேராபத்தைப்பற்றி விளக்கமாய்க் கூறுதல் வேண்டும். இந்தவகையிலே தமிழ் பேசும்மக்கள் தங்கள் நிலைமையை நன்கு விளக்கி ஒரு அறிக்கையைப் பாரதப் பிரதமருக்கு அனுப்புதல் பொருத்தமாகும். நேருப் பெரியார் போன்றவர்கள் உலகிலுள்ள நாடுகளின் தலைவர்களாய் வரும் வரையும் அமைதி நிலவுவதற்கு இடமேயில்லை. ஈழத்துப் பிரதமர் நேருப் பெரியாரின் புகழைப்பேசுவதோடமையாது அன்னாரின் இலட்சியங்களைப் பின்பற்றி நடப்பதற்கு எண்ணினாலும் இந்நாட்டு அரசியல் நெருக்கடி ஒரு வகையிலே குறைந்துவிடும் என எண்ணுகின்றோம்.

# உலகஉத்தமன்



## நேருப் பெரியாரின் வருகை நல்வரவாகுக

# 5வது திருக்குறள் மாநாடு

## தமிழ்நாட்டுப் பேரறிஞர்கள் பலர் பங்குபற்றுவார்கள்

ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளின்போது தமிழ் மறைக்கழகம் நடத்திவரும் திருக்குறள் மாநாடு இவ்வாண்டிலே கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் ஆனி (யூன்) 8, 9, 10, 11 எனும் நாலு நாள்கள் தொடர்ந்து நடைபெறும்.

கொழும்பிலுள்ள பல சங்கங்களின் ஆதரவில் நடக்கும் இந்த ஐந்தாவது திருக்குறள் மாநாட்டிலே சொற்பொழிவாற்றுதற்குத் தமிழ்நாட்டிலிருந்து தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களும், பேராசிரியர்கள் கோ. சுப்பிரமணிய பிள்ளை, க. பெருமாள், செல்வி மாசிலாமணி அம்மையார் முதலானோரும் அழைக்கப்பட்டுளர்.

இவர்களுடன் ஈழத்தமிழறிஞர் பலர் இம்மாநாட்டிற் கலந்து கொள்வர். ஊர்வலம், சொற்பொழிவு, இசைவிருந்து, நாடகம் முதலியன மாநாட்டின் நிகழ்ச்சிகளாக அமையும். தமிழ் மறைக் கழகம் நடத்திய அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்விலும் அகில உலகத் தமிழ் மறைக் கட்டுரைப் போட்டியிலும் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் இம்மாநாட்டில் வழங்கப்படும்.

—0—

# மனச் சமாதானம் பெறுதற்கு ஓரேயொரு வழி

## இறைவனுடன் இடையறாது ஐக்கியப்படுதல்

### திருநாமம்ஓதித் தியானம் செய்வதால் அது சித்தித்தலாகும்

எங்கள் மனம் உண்மையான சமாதானமுடையதாகச் செய்தற்குள்ள ஒரே ஒரு வழியாவது எங்களுக்குள்ளே யுள்ள உண்மைப் பொருளுடன் அதை இடையறாது ஐக்கியப்படுத்துவதாகும். திருநாமத்தை இடையறாது ஓதுவதனால் மனம் எப்பொழுதும் இறைவனைச் சிந்திக்கச் செய்யலாம்.

எவ்வளவுக்கு மனத்தை அகமுகமாயிழுத்து இறைவனைத் தியானிக்கச் செய்கின்றோமோ அவ்வளவுக்கு நாம் வெளியுலகிலுள்ள அவாக்கள், கிளர்ச்சிகள் ஆதியவற்றிலிருந்து விடுதலை பெறுதலாகும். இவ்வாறு செய்யப்படும்சாதனையானது எம்மிலுள்ள அகங்கார மமகாரக் குறிகளைப் படிப்படியாய் நீக்கி எம்மை இறைவனிடம் ஒப்புக்கொடுக்கும் நிலைமையை உண்டாக்கும். மனத்தை அடக்குதல் இலகுவானதொன்றன்றாகலின் இடைவிடாத திடமான சாதனை தேவையாகின்றது. அதிகாலையிலும் உறக்கத்துக்குப் போக முன்பும் இவ் வழியிற் சாதனைசெய்து பழகுதல் வேண்டும்.

இறைவனைத் தரிசிக்கப் பெறும் வழியின் இரகசியம் இடைவிடாத தியானத்திலேயே தங்கியிருக்கின்றது. இதைச் சரியாகச் செய்தால் சம்சார சாகரத்துள் நாம் அமிழ்ந்த மாட்டோமென்று திடமாக நம்பியிருக்கலாம். சமுத்திரத்துள் ஓர் தெப்பம் எப்படி உதவுகின்றதோ அப்படியே பிறவிப் பெருங்கடலுள் அமிழ்ந்தியிருக்கும் எமக்குத் திருநாமம் உதவுகின்றது. வீண் செயல்களிலும் பயனற்ற பேச்சுக்களிலும் வேண்டாத மனத்துன்பங்களை வளர்ப்பதிலும் செலவழிக்கும் நேரத்தை இறைவனைத் தியானிப்பதில் நாம் செலவழிக்கலாம். உறுதியானஒழுக்கமுறையும் சாதனமுமுள்ள வாழ்க்கையே மக்கட் பிறவியினருக்குண்டாகும் சூறாவளிகளிலிருந்து தப்புதற்கு உதவுவதொன்றாகும்.

வாழ்க்கையில் வெற்றி பெறுதற்கு மன வலியும் பொறுமையும் சாந்தமும் இன்றியமையாது வேண்டப்படுகின்றன. இடையில் வரும்நிகழ்ச்சிகளால் ஆண்மை குன்றவிடாது ஆன்ம சக்தியின் மேன்மையை மனத்தில் உறுதியாக இருத்தி நாம் எம்வாழ்க்கையைத் தூயதாக்கி நடத்துதல் வேண்டும். நீங்கள் உங்கள் வாழ்க்கையிற் பெறும் ஒவ்வொரு குட்டும் ஒவ்வொரு உதையும் இறைவனை நினைத்துத் தியானஞ் செய்தற்குச் சிறந்த தூண்டுதல்களாயமையட்டும். தாமசத்தை நீக்கி எப்பொழுதும் ஊக்கமாய்ச் செயலாற்றுங்கள்.

இவ்வாறு செய்யும்பொழுது உலகத்தவர்கள் உங்களைக் கண்டிக்கக்கூடும். அவற்றால் அசைவுறாது நீங்கள் செயலாற்றி முன்னேறுதல் வேண்டும். பக்தர்கள், ஞானிகள் ஆகியோரின் சரிதங்களிலே அவர்கள் பலவாறு துன்புறுத்தப்பட்டமையையும் தூற்றப்பட்டமையையும் நீங்கள் காணலாம். தம்மைக் கடவுளுக்கு ஒப்புக் கொடுத்துத் தூய வாழ்க்கை வாழ்வோர் பெரும்பாலும்பிழையாகக் கருதப்படுகின்றனர். அவர்களைப்பற்றிப் பொய்யுரைகளைப் பரப்பி அவர்களைத் துன்புறுத்த முயலுவார் பலருளர். அவர்களின் பொய்யுரைகளைப் பொருட்படுத்தாது திடசித்தத்துடனும் திடமான கடவுள் நம்பிக்கையுடனும் ஆன்ம ஈடேற்றத்துக்கான தூய சாதனங்களை நீங்கள் செய்வீர்களாக. உங்களுக்கு வேண்டும் உடல் வலியையும் மனவுறுதியையும் சாந்தத்தையும் இறைவன் உங்களுக்கு அருளுவாராக.

(ஸ்ரீ சுவாமி இராமதாசர் அவர்கள்கடிதமொன்றின்சாரம்.)

## இந்திய அதிகாரிகள் கைதிகளாயினர்

= 0 =

இந்திய துணைத் தூதுவர் அலுவலகத்தைச் சேர்ந்த இரு உயர்தர அதிகாரிகள் இலாகூர்ப் பாடிகாவலராற் கைதிகளாக்கப்பட்டனர். மதுவுண்டு முறை தவறி நின்றார்களென்பது குற்றச்சாட்டு. ஆனால் அரசாங்க வைத்தியசாலையில் அவர்கள் சோதிக்கப்பட்டபொழுது அவர்கள் மதுவுண்ணவில்லையென்று வைத்திய அதிகாரிகள் தீர்மானித்தனர். ஆயினும் குறித்த இந்திய அதிகாரிகள் விடுதலை செய்யப்படவில்லை. இதுபற்றி இந்திய அரசாங்கம் ஓர் உரத்த எதிர்ப்புரை ஒன்றை பாக்கிஸ்தான் அரசாங்கத்துக்கு அனுப்பியுள்ளதாம்.

# சுதுமலை உடையார் வளவு

செல்வி
செல்வ நாச்சியார்
—0—

சோதியுடன் கலந்த நாள்
அமர பக்கச் சதுர்த்தி
வைகாசி மாதம
மன்மத வருடம்



அவரை அன்புடன் நினைவு கூரும் அவர்தம் மணாளன் டாக்டர் தி. சின்னையாவும் பிள்ளைகளும், மருமக்களும், பேரப்பிள்ளைகளும் கொடுத்த நன்கொடை ரூபா பத்தையும் சைவ பரிபாலன சபையார் அன்புடன் பெற்றுக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை அரங்கம்

## விநாயக பரத்துவம்

ஆசிரியர்
**சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்**
அச்சுவேலி

பிரதிவிலை சதம் 60

பெறுமிடம்:
1 ச. கு. வைத்தீசுவரக் குருக்கள். அச்சுவேலி

2 சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை
26 காரணேசுவரர் கோயில் தெரு, மயிலாப்பூர் சென்னை

வியாயகப் பெருமான் மூத்த பிள்ளையார் என்றும் அழைக்கப்பெறுவர். சிவபிரான் உமையம்மையாருடன் இயைந்தவிடத்தில் முதலில் தோன்றியவர் பிரணவ சொரூபியாகிய விநாயகப் பெருமானேயாகலின் அறிஞர் அவரை அவ்வாறழைப்பர். அப்பெருமானது சொரூபமாகிய பிரணவம் சொற்பிரபஞ்சம் பொருட் பிரபஞ்சம் ஆகிய இருகூற்றுப் பிரபஞ்சத்துக்கும் மூலமாயுள்ளது. ஆகலினுலேயே எந்த ஒரு செயலை ஆரம்பிக்கும் பொழுதும் பிரணவ சொரூபியாகிய விநாயகப் பெருமானை நாம் வழிபடுகின்றோம். அப்பெருமானது திருவுருவின் பெருமையே உரையுள் அடங்குவதொன்றன்று.

> "தூமறைக்கெலா மாதியு
> மந்தமுஞ் சொல்லு
> மோமெனப்படுமோ ரெழுத்
> துண்மையை யுணரான்
> மாமலர்ப் பெருங் கடவுளு
> மயங்கினு னென்று
> ஞமினிச்சில வறிந்தன
> மென்பது நகையே"

என்று கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் கந்தபுராணத்திற் கூறியருளினுரென்ருல் அவரது பரத்துவம்பற்றிப் பிறிது நாம் பேச வேண்டியதில்லை. குரு சீட முறையில் தீக்கை விசேடத்துக்கேற்றவாறு இது அறிந்துணர்தற்பாலது; பிறவாறு அறிதல் இயலாது என்றமைதல் பொருந்தும். ஆயினும், குரு சீட முறை குன்றி நூலமுறையே இன்று மிகுந்து வருதலில் நூல்வாயிலாய்ச் சொல்லுதலும் முயலவேண்டியதாயிற்று. இது செய்தற்கெளிதன்று. 'செயற்கரிய செய்வர் பெரியர்' என்றபடி தகுதிவாய்ந்தபெரியோராலேயே செயற்பாலது. இன்று அத்தகைய தகுதி வாய்ந்து விளங்குபவர் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருககள் அவர்களே ஆவர். அன்னரின் இவ்வருட்செயலுக்குச் சைவஉலகுபெருங் கடப்பாடுடையது. இத்துறையில் மேலும் வேண்டப்படும் விளக்கங்களை அடுத்த பதிப்பில் வெளியிடத்தக்கவாறு குருக்களவர்களுக்குப் பிரணவப் பெருமான திருவருள் புரிவாராக. இப்பொழுது வெளிவந்திருக்கும் பெறற்கரிய இவ்வெளியீட்டைச் சைவமக்கள் ஆர்வத்துடன் வரவேற்றுப் படித்து இன்புறுவார்களாக.

x x x

**திருக்கடவூர் மகாகும்பாபிடேக மலர்கள்**

தருமபுர ஆதீனம் குரு மகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளத்தின்படி திருக்கடவூர் மகாகும்பாபிடேகத் தொடர்பில் 388ம் 389ம் எண்களில் இருவெளியீடுகள் வெளியிடப் பெற்றிருக்கின்றன. இவற்றுள் முந்தியது திருக்கடவூர்ச் சிறப்புக்களுடன் மகாகும்பாபிடேக விளக்கம் ஒன்றையும் தருகின்றது. மற்றது இறைவனிடம் அடியார் இட்ட சித்திகளைப் பெறுமாறு சமர்ப்பிக்கும் வேண்டுதல்களின் போது ஓதத் தகுந்த திருப்பாடல்களைத் தருகின்றது. அத்திருப்பாடல்களின் கருத்துப் பொழிப்புக்களும் பாடல்களின்கீழ் வருகின்றன. இவை சைவ மக்களுக்குப் பெரும்பயன் தருவன என்பது சொல்லாமலேயமையும்.

x x x

**நாவலர் நறுமலர்**

சிதம்பரம் ஸ்ரீ ஆறுமுக நாவலர் உயர்நிலைப் பள்ளியார் வெளியிட்டிருக்கும் "நாவலர் நறுமலர்" என்னும் வெளியீடு நாவலர் பெருமான் அவர்களின் கருத்துக்கேற்றவாறு நறுமணம் வீசுவதொன்ருயிருக்கின்றது. அவருடைய ஒப்புயர்வில்லாத வாழ்க்கைச் சிறப்பை நினைவுகூரச் செய்து, மொழி, சமயம், கலை முதலிய பலதுறைகளில் அறிவுக் கதிர் பரப்பும்அரிய அறிவுரைகளையுந் தந்து விளங்குகின்றது. நாவலர் உயர்நிலைப்பள்ளி வளர்ச்சிபற்றிய செய்திகளையும் அறியத் தருகின்றது. நாவலர் வழிநின்று தூய தொண்டாற்றுவோர் யாவரும் இதைக் கண்டு களிகூருவரென்பது சொல்லாமலேயமையும்.

x x x

**சங்கீதம்**

ஆசிரியர் திரு. பி. ரி. கிருஷ்ணமூர்த்தி, சென்னை.

பிரதி விலை: 20 நயா பைசா

இலங்கையில் பெறுமிடம்:
IMEX Distributors Co.
79 Wolvendhal Street
Colombo 12.

இது விசேடமாகச் சங்கீதம்பற்றியும் சங்கீதத்தைச் சார்ந்த விஷயங்கள் பற்றியும் விளக்கங்கள் கொடுத்துச் சங்கீதத்தை முன்னேற்றும் நோக்கத்துடன் சென்னையிலிருந்து வெளியாகும் மாத வெளியீடாகும். சங்கீதத்தை வளர்க்கும் முயற்சிகள் பல செய்யப்படும் இக்காலத்தில் சங்கீதம் பயில்பவர்கள் இதை விரும்பி வரவேற்பார்களென்று நம்புகின்றோம்.

---

# மாணுக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

**ஐந்தெழுத்துப் பொற்றுளம் வந்தமர்ந்த திருக்கரங்கள்**

மறுநாள் உதயத்தில் ஆலயத்துக்குக் கொண்டு சென்ருர். பிள்ளையார், தமது பிதாமாதாக்களாகிய பரமசிவனையும் பார்வதியையும் வணங்கினுர். பின்னர் திருக்கோலக்காவுக்குச் சென்று பதிகம் பாடினுர். அப்பொழுது கை தட்டித் தாளம் போட்டார். சிவனருளால் ஐந்தெழுத்து பஞ்சாக்கரம் பொறிக்கப் பட்ட பொற்றுளம் தங் கையில் இருக்கக் கண்டார். ஆனந்தங்கொண்டு ஏழிசையுந் தேங்கப்பாடினுர். விண்ணும் மண்ணும் விரும்ப — வேதாகமங்கள்வாழ—வந்த பிள்ளை சீர்காளியையடைந்தது — பதிகம்பாடி இளந் திருக்கோலங் காட்டி வீற்றிருந்தது: திருநனிபள்ளி பகவதியார் பிறந்த ஊர். அங்கிருந்தும் பிற இடங்களிலிருந்தும் பிராமணர்கள் தொண்டர்கள் வந்து பிள்ளையை வணங்கிப் பேறு பெற்றனர்.

**அந்தச் சோலை தோன்றும் பதி எது?**

திருநனிபள்ளிப் பிராமணர் தம்மூர்க்கு எழுந்தருளுமாறு வேண்டினர். சிவானுபூதிச் செல்வராகிய சம்பந்தர் தோணியப்பரை வணங்கிப் புறப்பட்டார். மலரினும் மெல்லிய திருவடிகள் தரையிற் பொறுக்கத் தாங்கவில்லைத் தந்தையாருக்கு. தோளிற் சுமந்து கொண்டு சென்ருர். வழியில் தூரத்தே சோலையொன்று தோன்ற "அப்பதி எது?' என்ருர் சிவபாதர். உடனே பதிகம் பாடிக்கொண்டு சென்று சுவாமியை வணங்கிட பிற தலங்களுக்குச் சென்று சிலநாளில் சீர்காழிக்குத் திரும்பினுர்.

**பிரியாதிருக்க வரந்தரவேண்டும்**

திருநீலகண்டப் பெரும்பாணர் என்று ஒருவர். இவருக்கு ஊர், திருவெருக்கத்தம்புலியூர் என்பது. தேவாரப் பண் பெரிதும் கைவந்தவர். திருஞான சம்பந்தப் பிள்ளையாரைக் காணவந்தார். பிள்ளையார் சுவாமிக்கு யாழ் வாசிக்கச் சொன்னுர். வாசித்தார். பிள்ளையாருக்குப் பெரிய மகிழ்ச்சி. பிள்ளையார் பாடுந் திருப்பதிகங்களை இசையோடு யாழிலிட்டு வாசித்து வந்தார். "இப்படியேஎப்பொழுதுஞ்செய்து பிரியாதிருக்க அருளல் வேண்டும் என்று பிரார்த்தித்தார். பிள்ளையார் உடன்பட அன்றுதொட்டு என்றுமகலாமல் இருந்து வந்தார்.

**கற்றுங்கெரியோம்புந் தில்லைச் சிற்றம்பலம்**

இடகலை – பிங்கலை –சுழுமுனை என்று நாடிகள் மூன்று. இடதுநாசி வளி வரும் மூச்சு இடகலை எனப்படும். வலதுநாசி வழிவரும் மூச்சு பிங்கலை எனப்படும். இரண்டிற்கும் மத்தியிலுள்ளது சுழுமுனுநாடி எனப்படும். அண்டமாகிய பரத கண்டத்தில் இலங்கைக்கும் இமயத்துக்கும் நடுவிலுள்ள தலம் தில்லை. பிண்டமாகிய சரீரத்தில் இடகலைக்கும் பிங்கலைக்கும் நடுவிலுள்ளது சுழுமுனு நாடி. தாவரமாகிய அண்டமும் சங்கமமாகிய பிண்டமுஞ் சமமாதலினுலே அண்டத்தினடுவாகிய தில்லையைச் சுழுமுனு நாடியென்பர். பூமிக்குச் சுழுமுனு நாடியாகிய தில்லைக்குச் செல்ல விரும்பினுர். எல்லாருஞ் சூழ்ந்துவரச் சென்ருர். தில்லையில் தில்லைவாழந்தணரும் பிறரும் எதிர்கொண்டனர். கனகசபையிலே ஆனந்தத் தாண்டவமாடுஞ் சபாநாயகரைக் கண்டார். திருக்கரங்கள் தானுகவே மேலெழும்பிக் குவிந்தன. நாத்தழும்ப – விழிநீர்பாய– ஆனந்தவெள்ளத்தில் அழுந்தினுர். "கற்றுங்கெரியோம்பி" என்னும் பதிகம் பாடினுர். அங்கு இருக்க அச்சமடைந்து திருவேட்களஞ் சென்று இருந்தார். ஒருநாட் தில்லைவாழந்தணர்கள், சிவகணநாதராய்த் (தேவகணத்தலைவர்)தோன்றக் கண்டு — பாணருக்குக் காட்டினுர். தாமுஞ் சபாநாயகரை வணங்கி "ஆடினுய் நறுநெய்யொடு பாறயிர்" என்னும் பதிகத்தாற் புகழ்ந்தார். தில்லைவாழந்தணரைக் கண்டமையை – "நீலத்தார் கரியமிடற்ருர்" என்னுந் திருப்பாட்டிலே "தொழுதேத்து சிற்றம்பலம்,' எனச்சிறப்பித்தார். பின்னர் பல தலங்கட்குந் தரிசனை புரிந்து திருவரத்துறை என்னுந் தலத்திற்கு எழுந்தருளினுர்.

**சிவிகையுஞ் சின்னங்களும் எடுத்துச் செல்லுமின்**

சம்பந்தப்பிள்ளைக்கு வழி நடந்த வருத்தம் அதிகம். அதனை நீக்கத் திருவரத்துறையீசன் திருவருள் கொண்டார். "ஞானசம்பந்தன் நம்மிடத்து வருகிருன். முத்துக்குடை, சிவிகை, சின்னங்கள் கொண்டு போய்க்கொடுங்கள் என்று பிராமணருக்குச் சொப்பனத்தில் ஆஞ்ஞை பிறந்தது. ஏற்றுக்கொள்ளுமாறு சம்பந்தருக்கும் திருவருள்புரிந்தது.முத்துக்குடை முதலியன கொண்டு பிராமணர்கள் வந்தனர். சம்பந்தரை வணங்கி ஏற்றருள வேண்டினர். அவர் "எந்தை ஈசனெம்பெருமான்" என்னும் பதிகத்தைப் பாடினுர். அருள் வடிவாகிய முத்துச் சிவிகையை வலம் வந்துவணங்கினுர். ஸ்ரீபஞ்சாக்கரத்தை ஓதிக்கொண்டு எல்லா வுலகமும் உய்யும்பொருட்டு ஏறினுர் சிவிகையில்.

"சைவ சிகாமணி வந்தார். ஞானச் செல்வர்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

---

## தமிழ் மக்களுக்குப் பௌத்த சமய வகுப்பு

அகில இலங்கைப் பௌத்த மகாநாட்டார் தமிழ்மக்களுக்குப் பௌத்த சமயத்தைப் படிப்பிப்பதற்கு ஒழுங்கு செய்கின்ருர்களாம். அரசாங்க கலாசாரப் பகுதியாரின் கருத்துப்படியே இவ்வியக்கம் தொடங்குகின்றதாம். இலங்கையிலுள்ள பிரதான பட்டினங்களில் இவ்வகுப்பு நடத்தப்பட விருக்கின்றது. பௌத்த மதத்தைத் தமிழ் மக்களுக்குப் படிப்பிக்க அரசாங்கம் ஏன் விரும்பியது என்ற கேள்விக்கும் குறித்த செய்தி மறுமொழி தருகின்றது. கண்டிமா நகரிலுள்ள சில தமிழ் மக்கள் விசேட பௌத்தசமய பாட வகுப்பொன்று நடத்துமாறு அரசாங்க கலாசார அமைச்சைக் கேட்டார்களாம். அது காரணமாய் இவ்வியக்கம் இலங்கை எங்கும் நடத்தப்பட விருக்கிறது.

---

## கல்வி மந்திரியின் கூற்றைக் கண்டிக்கிருர் சிங்களத் தலைமை ஆசிரியர்

நாட்டின் விசேட கருமங்களிற் சிக்கலுண்டாகும் பொழுது அதன் பொறுப்பை மற்றவர்கள் மீது சுமத்தி விடுகின்ருர் கல்வி மந்திரி. ஆசிரியர்களிடையே ஒற்றுமையின்மையை உண்டாக்கக்கூடிய இவ்விஷயத்தில் இச்சங்கம் ஈடுபடுதல் முறையீனமாகும். ஒற்றுமையின்மையை ஆசிரியர்களிடையே உண்டாக்கும் இச்செயலால் ஆசிரியர்களின் நலனைக் கல்வி மந்திரி எதிர்க்கின்ருர் என்பதை அவர் அறியச் செய்து விட்டார் என்று "லங்கா ஜாதிக குரு சங்கமய" (இலங்கை ஆசிரியர் சங்கம்) உதவிப் பணம் பெறும் பாடசாலைகள் எல்லாவற்றையும் அரசாங்கப் பாடசாலைகளாக்குமாறு கல்வி மந்திரி வெளியிட்ட கருத்துப் பற்றியும் இச்சங்கம் இக்கொள்கைக்கு ஆதரவு கொடுத்திருக்கின்றது என்று கூறப்பட்டதுபற்றியும் ஆராய்தற்குக் கூட்டிய கூட்டத்திலே, களுத்துறையைச் சேர்ந்த ஞானேதய சிங்கள கலவன் பாடசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ டபிள்யு. எஸ். சில்வா பேசும்போது கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரத்தில் 7ம் நாள் உற்சவம்

திருக்கேதீஸ்வரத்தில் கோயில் கொண்டருளியிருக்கும் கேதிஸ்வரப் பெருமானின் 7-ம் நாள் உற்சவம் நிகழும் ஏவிளம்பி வருஷம் சித்திரை மாதம் 13 ம் நாள் (25-4-57) வியாழக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் சிறப்பாக நடாத்தப்பட்டது. ஆலயம் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு காலை 9 மணிக்கு அபிஷேகத்திற்குரிய கிரியைகள் ஆரம்பமாயின. 12 மணியளவில் உச்சிக் காலப் பூசை மிகவும் சிறப்பாக நிறைவெய்தியது. அன்று திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசைத் தினமாகவும்வாய்க்கப்பெற்றமை மேற்படி கல்லூரியின் திருவிழாத் தினத்திற்கு ஒரு சிறப்பைக் கொடுத்தது.

திருக்கேதீஸ்வரத்திலுள்ள திருஞானசம்பந்தர் மடத்தில் கல்லூரி ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் மகேஸ்வர பூசை 10 மணியளவில் நடாத்தப்பட்டது. பின்பு 4 மணியளவில் வழக்கம்போல் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்படித்துப்பொருள் கூறப்பட்டது. மாலைப் பூசை 6 மணிக்கு நிறைவேறியது. மேற்படி ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவர் சேர். கந்தையா வைத்தியநாதன் அன்று சமூகமளிக்கா தபடியால் 7 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்ற கூட்டத்துக்கு திரு. மூ. ஞானப்பிரகாசம் தலைமைவகித்தார். திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலையின் பழைய அதிபர் திரு. சி. சுவாமிநாதன் அவர்கள் திருக்கேதிஸ்வரச் சிறப்பைப்பற்றியும் அதன் புனருத்தாரணத்தைப் பற்றியும் மகாஜனக் கல்லூரி ஆசிரியர் திரு. செ. சின்னத்துரை அவர்கள் "திருநாவுக்கரசு சுவாமிகள் திருநெறி" என்னும் விஷயம் பற்றியும் பேசினார்கள். பின்பு தியாகராசர் உற்சவமூர்த்திக்கு விசேட பூசை நடைபெற்றது. அவருடைய அருள்உலா 10 மணியளவில் ஆரம்பமாயது. கொடி, குடை ஆலவட்டம் முதலிய விழா அலங்காரங்களுடனும் தேவார திருவாசகப் பக்திப் பாடல்களுடனும் உலா மிகச் சிறப்பாய் நடைபெற்று நிறைவேறியது. (கடித)

## சிவஞானசித்திப் பரிசில்கள்

சென்ற 25-4-57 வியாழக்கிழமை அரியாலை பார்வதி வித்தியாசாலையில் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் சைவசமயப் பிரசங்கஞ் செய்தபின் அராலி தெற்கு திரு. வே. கந்தையா அவர்களால் நடத்தப்பெறும் ஆறுமுகநாவலரின் திருத்தொண்டு சேவா நிலைய ஆதரவில் நடைபெற்றுவரும் இடைநேரப் பள்ளிக்கூடமாகிய "ஆறுமுகநாவலர் சிவஞானபூசை போதன வித்தியாசாலையில் சிவஞானசித்தியார் மனப்பாடமாகப் படிக்கும் 1 மூ. திலகவதியார், 2 சு. புனிதவதியார், 3 ந. இராசலிங்கம், 4 மா. பவளராணி, 5 ந. தில்லைநாயகி, 6(முன்படித்த) சு. சுலோசினதேவி ஆகிய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் பரிசிலாக மேற்படிபிரசாரகரவர்கள் தமது கையால் ஊற்றுப் பேனை ஒவ்வொன்று சபையோர் முன் கொடுத்தார்.

அச்சிவஞான தானம் மிகவும் போற்றத்தக்க மேலான சிவபுண்ணிய தொண்டென்றும் மற்ற இடங்களிலும் சைவசமயப் பிள்ளைகளுக்குப் பெற்ருேர் ஆசிரியர்கள், அபிமானிகள் அவ்விதம் சிவஞான சித்தியார் மனப்பாடமாய்ப் படிப்பிக்கவேண்டுமென்றும் அவர் சபையோருக்குச் சொன்னார். -கடித

## இந்திய குடியாசுத் தலைவர்

—0—

கலாநிதி இராசேந்திர பிரசாத் அவர்கள் இந்திய குடியரசுத் தலைவராக இரண்டாம் முறையும் தெரிவுசெய்யப் பெற்றிருக்கின்றார். 4,99,698 வாக்குகள் அவருக்குச் சாதகமாய் அளிக்கப்பட்டன. மற்ற இருவருக்கும் மொத்தம் 3498வாக்குகள் அளிக்கப்பட்டன.

# மாணக்கர் மதி வள மன்றம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தார். ஓதாதுணர்ந்த வேதவித்தகர் வந்தார். ஞானப்பாலுண்ட சம்பந்தர் வந்தர். முத்தமிழ் விரகர் வந்தார்" என்று சின்னங்கள் ஆரவாரிக்கத் திருவரத் துறையைச் சேர்ந்தார். அங்குச் சில நாள் இருந்தார்.

### தாயார் நீற்றுக் காப்புத் தரித்தல்

பின்னர்ச் சீர்காழி நினைவு வந்துவிட்டது ஒரு நாள். திரும்பினர் சீர்காழிக்கு. வழியில் திருச்சேய்ஞலூர் என்று ஒருதலம். அது சண்டேசுர நாயனர் அவதரித்த திருப்பதி. அங்குச் சென்று "பீரடைந்த பாலதாட்ட" என்னும் பதிகம்; பீரடைந்த பால் என்பது புளித்த பால்; பீரடைந்த பாலதாட்ட என்னும் பதிகமருளி வேறு பல தல யாத்திரையுங் கண்டு சீர்காழிக்கு வந்தார்' அங்குள்ளார் வணங்கி வரவேற்றனர். பகவதியார் தாயார் திருநீற்றுக்காப்புச் சாத்தினர். திருநீற்றுக்காப்புச் சாத்துதல் என்ருல் விபூதியணிந்து காவல் செய்தல்; பேய் பசாசுகள் என்று சொல்லித் தாயத்துக்கள் கூடுகள் செய்வித்து ஜெபம், மந்திரம் என்பன ஓதிக் கட்டுகிருர்களே, அது போலக் காவல் செய்தார் பகவதியாருந் தம்மைந்தனுக்கு.

### அந்தியுண் மந்திரம் ஐந் தெழுத்தும்மே

பிள்ளையாருக்குப் பூணூற் சடங்கு புரியும் பருவம் வந்துவிட்டது. சிவானுபூதி பெற்ற செல்வர் அவர். அவருக்கு அது வேண்டியதில்லை. எனினும் வைதிக கருமத்தை நாட்ட விரும்பி; வைதிக கருமமென்ருல் வேதத்துட் கூறப்படுங் கிரியைமுறை; அதனை நிலை நாட்ட விரும்பி உடன்பட்டார். "நான்கு வேதங்கட்கும் அதிகாரந் தந்தோம்' என்று உபதேசந் தொடங்கினர்கள் பிராமணர்கள். ஆனல் அவரோ எண்ணிறந்த வேதங்களையும் அங்கமாகிய பல கலைகளையும் பொழிந்து காட்டினர். பரமனருள் பெற்றவர் என்பதைப் பிராமணர்கள் நினைதனர். வியந்தனர். வணங்கினர். தங்கள் சந்தேகங்களை அவரிடங் கேட்டுத் தெளிந்தனர். யாவருமறிந்துய்யும்பொருட்டும் ஸ்ரீ பஞ்சாக்கரமே— பஞ்சாக்கரம் ஐந்தெழுத்து—சகல மந்திரங்களுக்கும் வித்து; என்பதைக் காட்டும் பொருட்டும் "துஞ்சலுஞ் துஞ்சலிலாத போழ்தினும்" என்னும் பதிகத்தைப் பாடினர்.

### அப்பரும் பிள்ளையும் பணிந்து வணங்குதல்

இங்ஙனமாகப் பிள்ளையின் மகிமையை அப்பர் நாவுக்கரசர் அறிந்து சீர்காழிக்கு வந்தார். அடியார்களுடன் எதிர்கொண்டார் பிள்ளையார். ஒருவரையொருவர் பணிவுடன் வணங்கினர். இருவருஞ் சென்று சுவாமி தரிசனஞ் செய்தபின் அப்பருக்குச் சம்பந்தர் அமுது செய்வித்தார்.

### தொகுப்புரை

காலம் வெகு வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. பழைய நாட்களில் நேரம் இருந்தது போதிய அளவு. இந்தக்காலத்தில் வேலைகள் தேவைகள் அதிகம் நேரம் போதியதாக இல்லை என்கிருர்கள். எனவே நேரம் கிடைப்பது அருமை. எமக்கும் நேரமாகின்றது. இதுவரை திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் புராணத்தில் அவருடைய தந்தை சிவபாதவிருதயருடைய குணநலன்கள் சமயப்பற்று சைவமுந் தமிழுந் தழைக்கவோர் சற்புத்திரரை வேண்டித் தவம் புரிந்தமை. வையத்திருள் ஓட்டி ஒளிகாட்டுஞ் சூரியனேபோல ஞான சூரியனுகிய சம்பந்தர் அவதரித்தமை. திருத்தோணியீசர் அருள் புரிந்தமை ஞானப்பாலுண்டு தெவிட்டாத் தீந்தமிழ் பாடினமை பொற்ருளம் பெற்று ஏழிழையுந் தேங்கப் பதிகங்கள் பாடினமை. ஏழிசை என்பது ஸ ரி க ம ப த நி. ஏழிசையுந் தேங்கப் பாடினமை; சம்பந்தர் பதிகங்களையெல்லாம் திருநீலகண்டப் பெரும்பாணர் பண்ணில் அமைத்துப் பாடினமை. தில்லைச் சிற்றம்பலத்திலே கனகசபையிலே ஆனந்த தாண்டவமருளும் சபாநாயகரை வணங்கிக் "கற்ருங் கெரியோம்பி"ப் பதிகம் அருளியமை. சிவிகை சின்னங்கள் கொண்டு உபசரிக்கப்பட்டமை. தாயார் திருநீற்றுக் காப்புத் தரித்துக் காவல் செய்தமை. வைதிக கர்மத்தை நாட்ட விரும்பிப் பூணூற் சடங்கு புரிந்தமை முதலான விடயங்களையெல்லாம் நன்கு அறிந்து கொண்டீர்கள்.

அடுத்த பாடத்தில் மேலும் நாயனர் புரிந்த அற்புதத் திருவருட்செயல்களையும் திருவருளின் பெருமையையும் பற்றிப் படிப்போம். நீங்களும் ஒருமுறை வாசித்துக்கொண்டு வாருங்கள்.

(வளரும்)

### சுவெசு வாய்க்கால் போக்குவரத்து

சுவெசுக் கால்வாயைக் கப்பற் போக்குவரத்துக்கு உபயோகிக்கும் பதினைந்து தேசப் பிரதிநிதிகள் கூட்டமொன்று இலண்டன் மாநகரில் நடைபெற்றது. சில மேற்கு நாடுகள் விரும்பியது போல் சுவெசுக்கூடாய்ப் போக்குவரவுசெய்வதைக் கைவிடமுடியாதாகையால் அவ்வழிச் செல்ல விரும்புவோரைத் தடுக்க முடியாது என்றுகூட்ட முடிவுபற்றிப் பேசிய ஒருவர் கூறினர்.


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவுபிடிக்கும் காரைநகர் வடக்கு வலந்தலை வீ. வேலுப்பிள்ளை அவர்களின் அடைவுகடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மீட்கப்படாது இருக்கும் இதன்கீழ் விபரிக்கப்படும் நகைகள் 1957ம் ஆ வைகாசி மீ 27-ந் திகதி 9 மணி தொடக்கம் என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| இல | திகதி | கொடுத்த ரூபா | ஊர் | பெயர் | நகை விபரம் |
|---|---|---|---|---|---|
| 3727 | 16-1-56 | 750-00 | காரைநகர் பலுகாடு | கந்தையா வரதராசா | இரண்டுசங்கிலியும் இரண்டு பெண்டனும் |
| 3728 | 16-1-56 | 500-00 | do | do | ஒருசோடி காப்பு ஒரு சங்கிலி கூடு (தகடில்லை) |
| 3898 | 18-2-56 | 275-00 | do | do | ஒரு சோடி காப்பு ஒரு [illegible] |

வை. ஏரம்பமூர்த்தி
Auctioneer, Karainagar,
8—5—1957.

யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்

Std 14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிலஇலங்கைத்தமிழ்மறைத்தேர்வு

—0—0—

## சான்றிதழ் பெறுவோர் பட்டியல்

தமிழ்மறைற் கழகம் நடத்திய அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வுக்குத் தோன்றித் தக்க திறமை காட்டிச் சான்றிதழ் பெறுவோர்தம் பெயர்களைக் கீழேகாண்க. இச்சான்றிதழ்கள் கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் நடைபெறும் ஐந்தாவது திருக்குறள் மாநாட்டில் திருவள்ளுவர் திருநாளாகிய 11-6-57-ல் அன்று வழங்கப்படும். பெயர்களுக்கு முன்னுள்ள இடங்கள் தேர்வு நடைபெற்ற இடங்களாகும்.

மேற்பிரிவு

நெடுந்தீவு சி. பாலாம்பிகை.

மத்திப பிரிவு

அளவெட்டி க. கனகேஸ்வரி, க. தவமணி. ப. தனபாக்கியம், செ மனோன்மணி, கண்டி செ. அஜெமீலா, கொழும்பு சு. ஆனந்தேஸ்வரி, அ. சீதாலட்சுமி, சுளிபுரம் மு. தில்லைநாதன், நீர்வேலி சோ. பொன்னம்மா, நா. தெய்வநாயகி, நெடுந்தீவு நா. இலட்சுமி, சி. மகேஸ்வரி, சி. பராசக்தி, க. புவனேஸ்வரி, வே. வள்ளியம்மை, அ. திருநாவுக்கரசு, வை. குமாரசாமி, ஐ. பத்தினிப்பிள்ளை, சு. மரகதம, பன்வில இ. பாப்பு, ஏச். சற். ஜுவைரியாஉமமா, ஆ. தனலட்சுமி, சு. பரமேஸ்வரி, முள்ளியவளை வ. நல்லம்மா, யாழ்ப்பாணம் செ. மனோரஞ்சிதம், சு. சிவதாசன், செ. பதுமமணி வேலணை சோ. மகேஸ்வரி, சு. யோசேப்பு, மி. திரேசம்மா, ஊர்காவற்றுறை அ. பெ. செவதநாயகம காரைநகர் க. தியாகராசா.

கீழ்ப்பிரிவு

அளவெட்டி க. செகதீசவரி. ந. தேவிகாராணி, வி. மங்கையர்க்கரசி, மு. தனலட்சுமிதேவி, மு. ஆரியமாலா, சு. கலியோகவரதி, சி. சின்னம்மா, க. ஞானச்சந்திரன், பொ. சிவயோகம், த. நேசமலர், மு. உருக்குமணிதேவி, நா. சுசீலா, கு. இராசபாக்கியம், இறக்குவானை க. கதிரவேலு, பி. இராசரத்தினம், வீ. கந்தையா, செ மகாண்டன், செ. சீவரட்னம் கண்டி ஏ. எம். முசீலி, ஏச். எம. ராசிக். ஆர். எம. கனி, என். இமாப்பி, அ. மை. மூனத்தூங்குபுரு, ஏ. எச். சரிதா உமமா, இ. நோனுஹலீமா, அ. சித்தினுலியமமா, கரவெட்டி மா. சந்திரலேகா, க. நடேசு. ந. நல்லையா, ஏ சு. ஆனந்தம், கிளிநொசசி, சி. அன்னலட்சுமி, சு. பராசக்தி, ச. சர்வாகனிதேவி, வை. கணபதிப்பிள்ளை, சு. விஜயரத்தினம், கொழும்பு சா. பாலகிருஷ்ணன், பொ. தனபூஷணி, வை. பாலாம்பிகை, து. விசயரத்தினம், ந. விமலா, சே. வசுந்தரா, வி ரமோனு, சு. ஞானேஸ்வரி, சோ. இரத்தினபாள் சாவகச்சேரி ச. சோதுநாயகி, வே. சிவசுப்பிரமணியம், ச. வசந்தாதேவி, மு. மனோரஞ்சிதம், கு. இந்திராதேவி, நா. தனபாக்கியம், கா. தங்கமணி, இ. சோமசுந்தரப், க. கமலாவதி, செ. சரசுவதி, செ. தம்பிராசா, க. குமாரசாமி இ. ஜெகசோதி, வி ஆறுமுகம, வி. குமரேசு, செ. செதுப்பிள்ளை, ஆ. சின்னம்மா, மு. திலகவதி, சுளிபுரம் மு. குணரத்தினம், மு சுத்தானநதம், திருக்கோணமலை பு. சிவசாமிப்பிள்ளை, நீர்வேலி நா. பழனித்துரை, நெடுந்தீவு க. சரசுவதி, சு. சந்திராதேவி, நா. இராமச்சந்திரன், சோ. லோகராசா, பன்வில நா. சரசா, சி தேவபாக்கியம் முள்ளியவளை பொ. பொன்னமமா, ந. இந்திராதேவி, கி. நாகேசுவரி, ந. சாந்தனுதேவி, ஆ. மகாலெட்சிமி, தா. பூலோகநாயகி, வ. புவனேசுவரி, க. ஜெகசவுந்தரி, இ. அழகுராணி, செ. பரமேசுவரி, தே. ப. த. ஞானப்பிரகாசம், சி. இரகுநாதபிள்ளை, நா. பாலசும்பிரமணியம், கு. மகாலிங்கம், நா. புலேந்திரன், வே. பொன்னையா, அ. செல்வரத்தினம், யாழ்ப்பாணம், ம. சிவலிங்கம், ஐ. யேகேஸ்வரி, வேலணை பொ. சரோஜினிதேவி, பொ. பிருதுவிதேவி, தா. மீனும்பிகை காரைநகர் அ. பரஞ்சோதி. த. இராசேஸ்வரி, ந. சகுந்தலாதேவி,

தோடக்கப் பிரிவு:

அளவெட்டி : க. இரத்தினவேல், த.சிவபாலன், பொ. பாலகிருஷ்ணன், வி சிவானந்தராசா, இறக்குவானை: ஜோ. அசோக்குமார், இ. பாலாபிஷேகம், இ இராமநாதன், கொ. இரங்கன், த. சுந்தரராசா, வெ. உருக்மணி, மு நடராசா, க. முருகையா, அ. ஐயாக்கன், கரவெட்டி: சி. இராசநாதன், க. கனகசிங்கம், ஆ முருகதாஸ், செ. சிவபாலசிங்கம்.

கிளிநொச்சி :

க.சச்சிதானந்தம், சி.இளங்கோவன், சு. செல்வராணி, வை. சோதிமலர், சி சோதிலாமணி, மு. முத்துமணி.

கோழும்பு ;

பா. பவானி, சா. ஸ்ரீரங்கநாதன், பொ. சாரதா, சு. விக்னேஸ்வரி.

முள்ளியவளை : கு. லோகசவுந்தரலிங்கம், சி ஜெகதீஸ்வரி, அ. செல்லத்துரை, கா. தவபாலச்சந்திரன், மா. செல்வகுலேந்திரன், இ. விசாகலிங்கம், இ. உருத்திரமூர்த்தி, சி. சிவரஞ்சிதம் இ. தவமணிச, விமலாதேவி, செ. இராஜேஸ்வரி, சி. இந்திராணி, சு. யோகேஸ்வரி, ந. மகேஸ்வரி.

யாழ்ப்பாணம் : சி. ரஞ்சனு, த. ஆனந்த நடராசா, து. பேரின்பநாயகி, ந. சுந்தர காமாட்சி.

வேலணை : பொ. கலாநிதிதேவி, சி. பூமகள் பொ. பரராசசேகரம், தா. நல்லம்மா. க. சத்தியபாலன்.

*1958* - ஆம் ஆண்டுத் தேர்வுக்கு 1-11-57 க்கு முன் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

### ஆவணி மாச இராணுவ ஒழுங்கு

ஆவணி மாசச் சத்தியாக்கிரகத் தொடர்பில் வடக்கே வவனியாவிலும் கிழக்கே திருக்கோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, கந்தளாய், கல்ஓயா ஆகிய இடங்களிலும் இராணுவத்தினர் நிறுத்தப்படுவர்; பாடிகாவலருக்கு உதவி தேவைப்படும் இடத்துக்குக் காலதாமசமின்றிச் செல்லும் ஒழுங்கும் செய்யப்பட்டிருக்கின்றதென்று கூறப்படுகின்றது;

### உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 19—5—57 —— 25—5—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உம்முடைய சொந்தச் சிக்கல்கள் சில நீக்கப்படும். தனலாபமும் நிசசயம். கமத்தொழிற் சித்திக்கும் புகழுக்கும் இடமுண்டு. ஆனல் குடும்பச் சூழவில் எல்லாம் நல்லாயில்லை.

**இடபராசி** கார்த்திகை 2, 3 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

வழக்கத்திலும் பார்க்க வேலை கூடுதலாயிருயிருக்கும். நண்பருடனும் இனத்தவர்களுடனும் சண்டைகளுக்குமிடமுண்டு. குடும்பக குழப்பங்களுக்குமிடமுண்டு. ஆனுல் உம்முடைய பகைவரை நீர் வெல்லககூடியதாயிருககும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

இந்த வாரம் நீர் விரைந்து கோபிப்பீர். ஞாயிறு திங்களும் செவ்வாய் காலையும கவனமாய்க் கழிக்கவேண்டும் நண்பர் அதிக உதவியாயிருககமாட்டார். அவர்களின் உறுதிமொழிகளில் அதிகம் தங்கியிருக்கவேண்டாம். எதிர்ப்பிருந்த போதிலும் நீர் விரும்பியபடி முன்னேறுவீர்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

முதல் இருநாட்களும் புது முயற்சிகளுக்கு நல்லாயிருக்கும். செல்வாய் பிற்பகல் புதன் முன் கவனமாய்க் கழிக்க வேண்டும். வார மிறுதி திருப்பமும் நன்றாகும். ஆனுல் சுகவீனங்களுக்கிடமுண்டு.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

முன் அரை வாரத்தில் மேலதிகாரிகளிடமிருந்து உதவிகள் நிச்சயம். புகழுக்கும் தனலாபங்களுக்கு மிடமுண்டு. வியாழன் பிற்பகல் வெள்ளி சனி உமக்குச் சிறிது கோபமுண்டாக்கும். மனச் சமாதானமிருக்கமாட்டாது.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இந்த வாரம் நீர் எதிர்ப்பை வெல்லக்கூடியதாயிருக்கும், பணநிலைமைகள் திருந்த வேண்டும். கமததொழில்கள்மூலம் இலாபங்களும் நிச்சயம், விசேட கருமங்களில் இப்பொழுது ஆராய்வில்லாது தீர்மானம் எதுவும் செய்ய வேண்டாம்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

சிறிது காலத்துக்குத் தேகசுகம் விசேட கவனம் கொடுக்கப்பட வேண்டும். கண்நோய்களுக் கிடமுண்டு. பிதாவழி இனத்தவர் உமக்குச் சில தொந்தரவுகளைச் செய்யக்கூடும். ஆனுல் பணத்துறையில் ஒரு நல்ல வாரம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இந்த வாரம் குடும்பக்குழப்பங்களுக்கிடமுண்டு. கந்தோரிலும் ... கேடாயிருக்கும். உம்முடைய எல்லாக் கருமங்களிலும் கவனமாயிருக்கவும்,

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்,

பெண்ணின நண்பர் இந்த வாரம் உம்மைச் சில ஆபத்துக்களுக் குள்ளாக்கக் கூடும். உம்முடைய கருமங்களைச் சமாதானமாய்ச் செய்விக்க முடியாமலிருக்கும். பணத்துறையில் நல்ல வாரம்.

**மகாராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

எதிர்ப்புகளிருந்தபோதிலும் உம்முடைய கருமங்களை நீர் விரும்பியபடி கையாளக்கூடியதாயிருக்கும், ஆனல் உம்முடைய மனம் சமாதானமாயிருக்கமாட்டாது. அவமானங்களுக்கும் பிள்ளைகளால் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு. இரகசியப் பகைவரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

ஒரு நல்ல வாரம், உம்முடைய சொந்தக்கருமங்களில் அதிக திருத்தத்தை நீர் காண்பீர், சில முயற்சிகளை நீர் நன்கு ஒழுங்கு பண்ணக்கூடும். தனலாபமும் நிச்சயம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

உம்முடைய சுதந்திரம் குறைக்கப்படும். உம்முடைய கருமங்களை ஒழுங்குபண்ண நீர் பல இடைஞ்சல்களை வெல்லவேண்டியதாகும்; சிறு அபாயங்களுக்குமிடமுண்டு.

### தேகவியோகம்

ஈழகேசரி ஆசிரியர் திரு. இராஜஅரியரத்தினம் அவர்களின் தாயார் திருமதி இராசரத்தினம் இராசம்மா அவர்கள் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற செவ்வாய்க்கிழமை இவ்வுலக வாழ்வை நீத்தார். புதன் கிழமை பிற்பகல் 4 மணியளவில் சுற்றமித்திரர் பெருந்தொகையினர் முன்னிலையில் அவருடைய ஈமக்கிரியைகள் சைவ முறைப்படி சிறப்பாக நடைபெற்றன.

புத்திரன் திரு. அரியரத்தினத்துடன் ஓர் புத்திரியும் சகோதரிகள் திருமதிகள் செல்லம்மா சின்னையா, தங்கம்மா அருளையா சகோதரர்கள் திருவாளர்கள் ஏ. எம். கே. குமாரசாமி, மா. பீதாம்பரம் ஆகியோரும் வழித்தோன்றல்களாயுள்ளோர் பலரும் அவர் பிரிவால் வருந்துவாராயினர்.

கல்வித் துறையிலும் பிறவாறும் சமூகத்துக்குப் பெருஞ் சேவை செய்து விளங்கிய அம்மையார் இறைவன் திருவருளால் ஆன்ம சாந்தி அடைவாராக.

### திருக்குறள்நூற் காட்சி

இம் மாநாட்டுடன் திருக்குறள் நூற்காட்சியும் நடத்தப்படும். மாநாடு நடக்கும் நாலு நாட்களிலும் இக்காட்சி நடைபெறும். திருக்குறளும் திருவள்ளுவரும் பற்றிய நூல்கள் யாவற்றையும் சேர்த்துக் காட்சிக்கு வைக்கத் தமிழ் மறைக்கழகம் முயல்கிறது.

### சனசமுக நிலைய உறுப்பினர் சுற்றுப் பிரயாணம்

யாழ்ப்பாண மாவட்ட சனசமுக நிலையங்களின் அங்கத்தவர்கள் அடங்கிய குழு ஒன்று இலங்கையின் கலாச்சார, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை 1000 மைல் வரையில் பிரயாணம் செய்து தரிசித்தது.

அநுராசபுரம், கண்டி, நுவரேலியா, கதிர்காமம், கல் ஒயா, மட்டக்களப்பு, பொலநறுவை, திரிகோணமலை, ஆகிய பிரதான இடங்களைச் சுற்றிப் பார்த்தனர்.

சமாசத் துணைச்செயலாளர் திரு. டபிள்யு. என். தேவகடாட்சம் அவர்கள் தலைமையில் யந்திர விசை வண்டியில் புறப்பட்ட இச் சுற்றுப்பிரயாணக் குழுவினரை உள்ளூராட்சி அதிபர், திரு. ஏ. ஏ. யோசப் சமாசச்செயலாளர் முகாந்திரம் இ. பொ. இராசையா சமூகத்தொண்டன் ஆசிரியர் திரு. க. பே. முத்தையா ஆகியோர் ஆசிகூறி வழிஅனுப்பி வைத்தார்கள். இவர்களை அநுராதபுரத்தில் திருமதி எஸ். என். சிற்றம்பலம் வரவேற்றனர்.

—நிருபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புது உத்தியோகத்தருக்கே சிங்களம்

பழைய அரசாங்க உத்தியோகத்தர் ஆங்கிலத்தில் கடமையாற்றும் உடன்பாட்டுடனேயே பதவி ஏற்றனராகலின் அவர்களுக்குச் சிங்களமொழி அறிவுக் கட்டுப்பாடிருக்கமாட்டாது. ஆனல் புதிய உத்தியோகத்தர் பதவி ஏற்று மூன்று ஆண்டுகளுக்குள் சிங்கள மொழி அறிவு பெற்றுவிட வேண்டும் என்று முதல் மந்திரி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்ருர். பழைய உத்தியோகத்தர் சிங்கள அறிவைப் பெறுதற்குப் பணஉதவித் தூண்டுதல் கொடுக்கப்படுமென்பது அரசாங்கத்தின் தீர்மானமாகும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்
கரணவாய் வடக்கு ஆறுமுகம் இலகுப்பிள்ளை —வழக்காளி
இல, 1152
எதிர்
வரணி இயற்ருலை வேலுப்பிள்ளை சந்திரசேகரம்
—எதிராளி.

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் 1152-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப் பிரகாரம் கீழ்க்கூறப்படும் ஆதன விடாப்பில் விபரிக்கப்படு மாதனங்கள் 1957-ம் ஆ. ஆனி மீ 12-ந் உ புதன்கிழமை காலை 10 மணியளவில் அவ்வக் காணிகட்குள் நின்று என்னுற் பிரசித்த ஏலததில் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:- ரூபா. 1096-67 ம் 5-1-1956 தொடக்கம் 24-4-56வரையும் ரூபா 800/-க்கு 8 வீத வட்டியும் கூட்டி வரும தொகைககு 25-4-56 தொடககம் இறுக்கும் வரைக்கும் 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 195-25 ம்.

### ஆதனவிடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி வரணிக் கோவிற்பற்று வரணி இயற்ருலையிறை கதிர்கிளி வயல் நெற்பரப்பு 60. அறுபதுக் செல்லை கிழக்கு கந்தையா பெண் மீனுட்சிப்பிள்ளைக்குரிய வாதனம், வடக்கு றப்பியேல் செல்வத்துரையினுதனம். மேற்கு கணபதிப்பிள்ளை பெண் விசாலாட்சிக்குரியவாதனம். தெற்கு சிதம்பரன் முருகனுக்குரியவாதனம். இதடங்கலிற் சொரியலாய் (1/3) மூன்றிலொரு பங்கு. பதிவு இல. F. 262/293.

2. ஷ்யிறை மருதன் தாழ்வு நீ. பர. 20, எல்லை கிழக்கு சட்டநாதர் குலசேகரம்பிள்ளைக்குரிய வாதனம். வடக்கும் மேற்கும் சின்னத்தம்பி கந்தனுக்குரியவாதனம். தெற்கு சண்முகநாதன் பெண் கணேசரத்தினத்துக்கும் சகோதரிக்குமுரியவாத்னம். இவ்வெல்லைக்குட் சேர்ந்த நிலம்பயிர் வகைகளனைத்திலும் சொரியலாய் (1/3)மூன்றிவொரு பங்கு பதிவு இல, F, 262/294.

மு. நா. மார்க்கண்டு
கொம்மிஷ்னர்
சாவகச்சேரி, தெற்கு
10-5-57.
M. 20 17-5-75.

## பிரிவுணர்ச்சியைப் போக்க வேண்டும்

மன உறுதியுடனும், ஊக்கத்துடனும், அறிவுடனும் செயலாற்ற வேண்டிய நேரம் இதுதான். இவ்வாறு செயலாற்ருவிட்டால் நமது நிலைமை இப்பொழுதுள்ளதை விட மிக மோசமாகிவிடும். சாதி வெறி, வகுப்பு வெறி, அதிகார வெறி ஆகியவை இன்னும் நிலவுகின்றன. சமசந்தர்ப்பம் யாவருக்கும் கொடுக்கும் குறிக்கோள் நிறைவேற வேண்டுமானல் நம்மையே நாம் ஆராயவேண்டும். நமக்குள்ளேயுள்ள பிரிவுணர்ச்சியை நாம் உணர வேண்டும் என்று இந்திய மேற்சபையில் கலாநிதி எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுப் பிரிவுணர்ச்சியை நீக்கி ஒற்றுமையை வளர்க்குமாறு கேட்டுக்கொண்டார்.

## வளருகின்றதாம் பாக்கிஸ்தான் உண்ணு விரதம்

பாக்கிஸ்தான் குடியரசுத் தலைவரின் மாளிகைக்கு முன்பு, தென்கிழக்கு ஆசிய நாட்டு ஒப்பந்தம் பாக்தாத் உடன்படிக்கை ஆகிய யுத்த உதவிச் சபைகளி லிருந்து பாக்கிஸ்தான் நீங்கவேண்டுமென்று பல நாட்களாய் உண்ணுவிரதம் பூண்டுள்ள ஐந்து பேருடன் மேலும் மூன்றுபேர் சேர்ந்துள்ளனராம். வெளிநாட்டு மந்திரி ஸ்ரீ பிரோஸ்கான் நூன் இவ்வுண்ணு விரததஸதக் கைவிடச் செய்த முயற்சி சித்தி பெறவில்லை என்று இத்தொடர்பிற் குறிக்கப்பட்டுள்ளது.

—0—

## உருவ வழிபாடுபற்றி இராசகோபாலாச்சாரியர்

கோயில்களிலுள்ள தெய்வ உருவங்கள் சிலர் நினைப்பது போல் வெறும் கற்களல்ல. மக்களின் மனத்தை ஆண்டவன்மீது பக்தியுடையதாக்கும் வழியில் அவை அமைக்கப்பெற்றிருக்கின்றன. துவைதம், அத்வைதம் என்ற வாதங்களில் மக்கள் தங்கள் சக்திகளைச் சிதறப்பண்ணுமல் ஆண்டவனை வழிபடுவதில் மனதைச் செலுத்த வேண்டும். கடவுள் எங்குமிருக்கிருர். ஆனல் விசேடமாகக் கோயில்களி லிருக்கிருர் என்பதை மக்கள் உணர்தல் வேண்டும் என்று ஸ்ரீ ச இராச கோபாலாச்சாரியார் அவர்கள் சென்னையிலே பேசுப்போது கூறினர்.

## மண்டல சமாதானச் சபை அமைப்பு

சட்டவிரோதச் செயல்களல்லாத பிணக்குகளைத் தீர்ப்பதற்கு நாட்டின் பல பாகங்களில் மண்டல சமாதானச் சபைகள் அமைக்க நீதி அமைச்சு தீர்மானித்துள்ளதாம். இச்சபைகள் அமைக்கப்பட்டபின் அவ்வப் பகுதிகளிலுண்டாகும் பிணக்குகள் இச்சபைகளால் ஆராயப்பட்டுச் சமாதானஞ் செய்யப்படும். சமாதானஞ் செய்ய முடியாத பிணக்குகள் மாத்திரம் நீதி மன்றங்களுக்குக் கொண்டுபோகப்படும். சமாதானம் செய்ய முடியவில்லை என்ற இச்சபையாரின் தீர்மானத்தை எழுத்திற் கொண்டுபோயே நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும் இச்சபைகளுக்குச் சமாதானஞ் செய்யும் உரிமையேயன்றித் தீர்ப்புக் கொடுக்கும் உரிமையில்லை, ஒவ்வொரு சபையிலும் ஐவர் உறுப்பினராயிருப்பார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 10352
வண்ணுர்பண்ணை கிழக்குக்குடி சுப்பர் தம்பிப்பிள்ளை
—வழக்காளி,
எதிராக
வண்ணுர்பண்ணை மேற்கு 23 ம் நம்பர் பிச்சைக்குள ரோட்டில் இருக்கும் செய்யது சுல்தான் அப்துல்காதர் மொகிமின்கண்டு
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 10352-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1957ஹு ஆனிமீ 22உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணுர்பண்ணைக்கோவிற்பற்று வண்ணுர்பண்ணை மேற்கிறை பிச்சைக்குளன் கரையும் இத்தியடியும் பர. நி. இல 2 5/8 கல்வீடும் வடக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றுப் பங்கும் செய்பயிரும். எல்லை கிழககு காதர் மொகிடீன் பெண் சுலைகா உம்மாவின் ஆதனம். வடக்கு காதர் சாய்பு பெண் முகமது கன்னிபாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும் ஒழுங்கையும் முகமது உசன் தம்பி பெண் மொகிடீன் நாச்சியாவுக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். மேற்கு முகமது உசன் தம்பி மொலீன் முகமது லேபேயின் ஆதனம். தெற்கு பிச்சைப்பிள்ளை மரக்காயர் சின்னத்தம்பிகளும் மறுபேருக்குமுரிய ஆதனம் இதடங்கலும். இது காணிப் பதிவு கந்தோரில் D. 205/190 ல் பதிவு செய்யப்பட்டது.

2. மேற்படி இறை இத்தியடி பர. நி, இ 3 செய்பயிர் வான் பயிரும் இதில் வடக்குப் புறமாக ஓர் பாக நிலம் 48 அடி 3 இஞ்சி நீளமும் 13 இஞ்சி அகலமுங் கொண்ட இக் காணிக்கு எல்லை கிழக்கு கே. எஸ். மொகிடீன் கச்சியாரின் ஆதனம், வடக்கு மேற்குறித்த எதிரியின் காணி. மேற்கும் தெற்கும் உஷான் சாகிப்முத்து முகமதுவுக்கும் பெண் சல்மாவுக்கும் உரிய ஆதனம் இதடங்கலும். இது காணிப் பதிவு கந்தோரில் D. 205/173 ல் பதிவு செய்யப்பட்டது.

சே. இரத்தினசபாபதி
கொம்மிஷனர்
24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம்
11-5-57.
M. 21 17-5-57


# தேவை

—:—

சபையின் சைவப்பிரகாச அச்சகத்திற்கு சைவசமய நூல்களிலும் தமிழிலும், பாண்டித்தியம் அடைந்தவரும், ஆங்கில அறிவுடையவருமாகிய ஒருவர் நூல் பிரசுர ஆசிரியராகத் தேவை. சபைக் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். தராதரத்துக்கேற்ற வேதனம் கொடுக்கப்படும்.



## இந்தியாவில்

# 35 நாள்! 6000 மைல்!!

## காசி யாத்திரையும் ஆனி உத்திர சிதம்பர தரிசனமும்

—★—

சேது, இராமேஸ்வரம், மதுரை, திருப்பரங்குன்றம், பழனி, பங்களூர், மைசூர், மதருஸ், திருப்பதி, பம்பாய், எல்லோரா, ஆக்ரா, மதுரா (பிருந்தாவனம் டெல்லி, அரித்துவாரம், லக்னே, அயோத்தி அலகபாத், பனரிஸ் (காசி) காயா, கல்கத்தா, பூரி, சிதம்பரம் ஆகிய இடங்களைப் பார்த்து அங்குள்ள

இந்துமத பழம் பெரும் கோயில்கள் — புனித தீர்த்தங்கள் —இந்திய புராதன கலைச்செல்வங்கள் — அகிலஇந்திய கலாச்சாரம் முதலியவைகளை அறிந்து வர

**கட்டண விபரம் (இருநேர தாவரபோசன வசதியுடன்)**

| | | |
|---|---|---|
| முதலாவது வகுப்பு | ரூபா | 625-00 |
| இரண்டாவது வகுப்பு | | 475-00 |
| மூன்ருவது வகுப்பு | | 350-00 |

**இலங்கையிலிருந்து புறப்படும் திகதி 27-5-57**

( இதுவே மலிவு டிக்கட்டின் கடைசி மாதம் )

* இவ்வரிய பொன்னன சந்தர்ப்பத்தைத் தவற விட்டுப் பின் துன்புருதீர்கள்.

குறிப்பிட்ட அளவு யாத்திரீகளுக்கே இட வசதி உண்டென்பதையும் இலங்கைப் பிரஜைகள் மட்டுமே இதில் பங்கு பற்றலாம் என்பதையும் முன்னரே அறியத் தருகின்றேம்.

☞ பாஸ்போட்—விசா மற்றும் விபரங்களுக்கு இன்றே எம்மிடம் வாருங்கள்; அல்லது எழுதுங்கள்.


**விவேகானந்தா டிரேட்ஸ் கோப்பரேஷன்**

மலாயா - சிங்கப்பூர் - இந்தியா பிரயாண வசதி செய்பவர்கள்

31, கே. கே. எஸ். ரேட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
( பெரியகடைச் சத்திரத்திற்கு மேற்குப் பக்கம் )

தந்தி: "சென்றவேல்" Grams "CENTRAVEL"







வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு, சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 17-5-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org